1971 ஜூலை 29] [திரு. க. அன்பழகன்]

கள், பட்டதாரிகளுக்குச் சமமாக, படிப்பு உடைய இண்டிஜினஸ் மெடிசன், இண்டக்ரேடட் மெடிசன் துறையில் படித்தவர்களுக்குச் சமமாக வாய்ப்பு பெறுகிற, உரிமை பெறுகிற இந்த ஒரு நல்ல திருத்தத்தை, அவர்கள் வரவேற்றதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே, இந்தத் திருத்த மசோதாவை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Tamil Nadu Registration of Practitioners of Integrated Medicine (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 26 of 1971), be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, I move—

"That the Bill be passed."

The motion was put and carried and the Bill was passed into law.

## (9) அரசினர் தீர்மானம்.

### அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "நமது சட்டப்பேரவை நடைமுறை விதிகளின் 21(3) பிரிவின்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் அரசினர் சட்ட முன் வடிவுகள் என்ற தலைப்பில் இனம் 5-க்குப் பிறகு இனங்கள் 11, 12ஐ எடுத்துக் கொள்ளவேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

## (7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (ஊ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1971).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1971)ஐ பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோருவார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, " தமிழ் நாடு 1971ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

பேரவைத் துணைத் தலைவரவர்களே, காஞ்சீபுரம், மதுரை, செங்கற்பட்டு ஆகிய இடங்களிலே உள்ள முன்சீபுகள் அதிகார வரம்பிற்கு அப்பால் சில தீர்ப்புகளை வழங்கிய காரணத்தினால் இந்தச் சட்டத்திருத்தத்தினை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது என்று மட்டும் மன்றத்திற்குத் தெரிவித்துக்கொண்டு இத்திருத்த மசோதாவினை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, முதலில் இப்படிப்பட்ட சட்டத்திருத்தங்களையெல்லாம் பட்ஜெட் ஸெஷனோடு வைத்துக்கொள்ளாமல் தனியாக வைத்துக் கொண்டிருக்கவேண்டும். காரணம் எதற்கும் நேரம் போதாமல் போய்விடுகிறது. இப்போது கொண்டுவரப்படும் சட்டங்களுக்கு திருத்தம் கொடுக்க முடியவில்லை என்றால் நேரம் இல்லாத காரணம் தானே தவிர திருத்தங்கள் இல்லாது இல்லை. எனவே பட்ஜெட் கூட்டத்தோடு மசோதாக்களைக் கொண்டுவராமல் தனியாகக் கொண்டு வந்தால் சற்று நிதானமாக ஆராய்ந்து சட்டங்களைக் கொண்டுவருவது வரவேற்கத்தக்கதாக இருக்கும்.

இச்சட்டத்தை இப்போதாவது அரசு கொண்டுவந்தது பற்றி மகிழ்ச்சி. காரணம் இது (question of Juridiction) பற்றியது. அதிகாரம் இல்லாது அதிகாரம் செய்தது தவறு என்பதை எந்தக் கட்டத்திலும் யாரும் நீதி மன்றத்தில் வாதிக்கலாம். ஆனால் இதனால் பொதுமக்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். உதாரணமாக மதுரை மாவட்டத்தில் கலெக்டர் அவர்களின் அடிஷனல் பெர்ஸனல் அசிஸ்டெண்ட் பதவியை, 1967-ல் எடுத்துவிட்டார்கள். மாவட்ட ரெவின்யூ அதிகாரி அவருடைய பணிகளைச் செய்துகொண்டு இருந்தார்கள். 1967-லிருந்து 1971 வரையில் நான்காண்டு காலம் இது நடந்துவந்தபிறகு இப்போது இதை முறையாக்குவதற்கு சட்டம் வருகிறது. எப்போது அந்த போஸ்டு அபாலிஷ் செய்யப்பட்டு விட்டதோ அப்போதே திருத்தம் கொண்டு வந்திருக்கவேண்டும். இடையிலே இந்த நான்கு ஆண்டுகாலம் இந்த சட்ட இலாகா என்ன செய்தது, அமைச்சரவை என்ன செய்தது என்றே தெரியவில்லை. மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இனியாவது " வேலிடேஷன் ஆக்ட் " என்று வரும்போது உடனடியாக அவ்வப்பொழுது திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டும். நான்கு ஆண்டுகாலம் அரசாங்கம் சும்மா இருந்தது மிகமிகக் கண்டிக்கத்தக்கதாகும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

---

* ......7—7—1971-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

1971 ஜூலை 29]

திரு. கே. டி. கே. தங்கமணி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டு நடந்துவிட்ட சில காரியங்களை சீர்பண்ண வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திருத்த மசோதாவினைக் கொண்டுவந்திருப்பதாக அறிவித்தார்கள். உதாரணமாக 1960-ம் ஆண்டுச் சட்டத்தின்படி the Additional P.A. to the Collector of Madurai was authorised to perform the functions of the Authorised Officer under the Act.

ஆனால் அந்தப் பதவியே எடுப்பட்டுப்போன பிறகு ஏற்பட்ட சில சிக்கல்களை இப்போது ஒழுங்கு பண்ணுவதற்கு என இதைக் கொண்டுவருகின்றார்கள். பொதுவாக பதவி தீர்ந்துபோனவுடன் உடனடியாக வேலிடேஷன் ஆக்ட் கொண்டுவர வேண்டும் என்று மட்டும் என் யோசனையைத் தெரிவித்துக்கொண்டு இப்போதாவது அந்த வேலிடேஷன் ஆக்ட் வருவது பற்றி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மதுரை மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர் அவர்கள் 1—5—1967 முதல் 7—5—1968 வரையில்தான் இக்காரியங்களை ஏற்றுச் செய்திருக்கின்றார்கள். அவர்கள் 61 வழக்குகளைப் பரிசிலித்து நீதி வழங்கியிருக்கின்றார்கள். அவற்றுக்குத்தான் இப்போது சட்ட பூர்வமான அங்கீகாரம் கொடுக்கிறோமே தவிர வேறு ஒன்றும் இல்லை என்றும், இது சாதாரண சட்டப்பிரச்சனை என்றும் மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவேதான் இத்திருத்தச் சட்ட முன்வடிவை அவையின் முன் வைக்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

MR. DEPUTY SPEAKER: There is no amendment here. So I shall put the clauses to the Vote of the House.

Clauses 2, 3 and 4 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

"தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1971) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.